# 47. நெஞ்சுப்பத்து

கலிவிருத்தம்

**பூமண மிறைச்சிமது பொங்கலொடு போதை**
**நேமமுட னேயிழிதெய் வங்களெதிர் நீட்டிச்**
**சேமமுற லுண்டெனினல் லும்பர்பணி தேவை**
**நீமுனி நயம்பெறவொ ரையமெனை நெஞ்சே.**

*பூமணம் இறைச்சி மது பொங்கலொடு போதை*
*நேமம் உடனே இழி தெய்வங்கள் எதிர் நீட்டிச்*
*சேமம் உறல் உண்டு எனில் நல் உம்பர் பணி தேவை*
*நீ முனி நயம்பெற ஓர் ஐயம் எனை நெஞ்சே.*

நெஞ்சே! மலர்கள், மணப்பொருள், மாமிசம், மது, பொங்கல், மயக்கம் தரும் பொருள் ஆகியவற்றை நியமத்துடன் கீழான தெய்வங்களின் முன்னே படைத்து நன்மை பெறுதல் உண்டு என்றால், நல்ல தேவர்கள் வணங்கும் பெரிய கடவுளான கந்தவேளை நீ நினைத்து, நன்மை பெறுவதற்கு ஓர் ஐயம் என்ன? இல்லையன்றோ? 1

**என்னடிய வர்க்குலகி லேதுதுய ரென்று**
**சொன்னகும ரேசனது சொன்னிஜ மறந்திங்**
**குன்னிடு கலக்கமிக வுற்றுலைவ தென்னை**
**அன்னவ னடிக்கடிமை யாகவமர் நெஞ்சே.**

*என் அடியவர்க்கு உலகில் ஏது துயர் என்று*
*சொன்ன குமரேசனது சொல் நிஜம் மறந்து இங்கு*
*உன்னிடு கலக்கம் மிக உற்று உலைவது என்னை*
*அன்னவன் அடிக்கு அடிமை ஆக அமர் நெஞ்சே.*

நெஞ்சே! இவ்வுலகில் என் அடியார்க்கு ஏது துன்பம் என்று சொன்ன குமரேசனுடைய சொல்லின் உண்மையை மறந்து, இவ்வுலகில் நினைத்திடும் கலக்கம் மிகுதியும் கொண்டு அலைவதேன்? அன்னவன் திருவடிக்கு அடிமையாக நீ அமர்வாயாக. 2

**தாரகன் மரிக்கமலை சாயவசு ரேசன்**
**பாரவுடல் பீறவொரு பாழியயி லேவும்**
**வீரனடி யெண்ணவினை வெல்வதரி தோசம்**
**பூரண நினைப்பொடது போற்றுதியெ னெஞ்சே.**

*தாரகன் மரிக்க மலை சாய அசுரேசன்*
*பார உடல் பீற ஒரு பாழி அயில் ஏவும்*
*வீரன் அடி எண்ண வினை வெல்வது அரிதோ சம்*
*பூரண நினைப்பொடு அது போற்றிதி என் நெஞ்சே.*

என் நெஞ்சே! தாரகாசுரன் மடியவும், கிரௌஞ்சமலை பிளக்கவும், அசுரர் அரசனான சூரனுடல் பிளக்கவும், ஒரு வலிய வேற்படையை ஏவின வீரனான குமரனின் திருவடியை நினைக்க வினையை வெல்வது அரிதாகுமோ? சம்பூர்ணனின் நினைப்பொடு அதனை வணங்குவாயாக! 3

**வாக்குமன மெய்வழி வளர்ந்தபவ மெல்லாம்**
**போக்கவுள நீயுறை புதைக்கிறுதி வந்து**
**நீக்குமுன மேகுருவை நேயமுட னேடு**
**நோக்கநிறை வேறுமதி நுட்பமிது நெஞ்சே.**

வாக்கு மனம் மெய்வழி வளர்ந்த பவம் எல்லாம்
போக்க உள நீ உறை புதைக்கு இறுதி வந்து
நீக்கும் முனமே குருவை நேயமுடன் நேடு
நோக்கம் நிறை வேறும் மதிநுட்பம் இது நெஞ்சே.

நெஞ்சே! வாக்கு மனம் மெய் வழியாக வளர்கின்ற பாவங்கள் எல்லாம் போக்க, நீ வாழும் உடம்பிற்கு முடிவு வந்து நீக்குவதற்கு முன்பு, குருவை அன்புடன் தேடுவாயாக! இதுவே உன் நோக்கம் நிறைவேறுதற்குரிய மதிநுட்பமாகும்! 4

**புண்ணிய மிலாவறியர் புந்திநிகர் கூந்தற்**
**பெண்ணசை யெனுங்கழுது பின்றொடரு மேற்சேய்**
**தண்ணளி யெனும்பெரிய தண்டமது கொண்டு**
**மண்ணின்மடி யும்படி வதைத்தினிதுய் நெஞ்சே.**

புண்ணியம் இலா வறியர் புந்தி நிகர் கூந்தல்
பெண்நசை எனும் கழுது பின்தொடருமேல் சேய்
தண்ணளி எனும் பெரிய தண்டம் அது கொண்டு
மண்ணில் மடியும்படி வதைத்து இனிது உய் நெஞ்சே.

நெஞ்சே! புண்ணியம் இல்லாத வறுமையுடையவர் மனம் போல், இருண்ட கூந்தலுடைய மாதர் ஆசை என்னும் பேய் பின் தொடருமானால், சேயின் குளிர்ந்த அருள் எனும் பெரிய தண்டத்தைக் கொண்டு, நிலத்தில் இறந்து விழும்படி அந்தப் பேயை வதைத்து நீ பிழைப்பாயாக! 5

**சந்ததமு மாடரி தழங்கிட நடிக்கும்**
**செந்தினகர் மேவிய திருக்குமர வேடாள்**
**புந்தியி னினைந்துதெளி போதவறி ஞர்க்கால்**
**எந்திரமு மந்திரமு மேனுணர்வு நெஞ்சே.**

சந்தமும் ஆடு அரி தழங்கிட நடிக்கும்
செந்தில்நகர் மேவிய திருக்குமரவேள் தாள்
புந்தியில் நினைந்து தெளி போத அறிஞர்க்கு ஆல்
எந்திரமும் மந்திரமும் ஏன்உணர்வு நெஞ்சே.

அறிவுடைய நெஞ்சே! எப்போதும் வெற்றிச் சிலம்பு ஒலிக்க நடமிடும் திருச்செந்தில் நகரில் எழுந்தருளியுள்ள திருக்குமரவேளின் திருவடியை மனத்தில் நினைத்துத் தெளிகின்ற ஞானமுள்ள அறிஞர்க்கு இயந்திரமும், மந்திரமும் ஏன்? தேவை இல்லை என்றவாறு! 6

**ஆதியிடை யந்தர மிலாதவயி லீசன்**
**பாதவிணை கொண்டருள் படைத்தநிபு ணர்க்கு**
**மாதமொ டிராசிதிதி வாரமெழு நாள்கோள்**
**ஏதுமிலை யென்றறிவி லேறுணர்வு நெஞ்சே.**

ஆதி இடை அந்தரம் இலாத அயில் ஈசன்
பாத இணை கொண்டு அருள் படைத்த நிபுணர்க்கு
மாதமொடு இராசி திதி வாரம் எழுநாள் கோள்
ஏதும் இலை என்று அறிவில் ஏறு உணர்வு நெஞ்சே.

அறிவுடைய நெஞ்சே! முதலும் நடுவும் முடிவும் இல்லாத வேலிறைவன் இரு திருவடிகளை வணங்கி அருள்பெற்ற நிபுணர்களுக்கு, மாதம், இராசி, திதி, வாரம், எழுநாள், கோள் என எவையும் இல்லை என்று அறிவில் உணர்த்துவாயாக! 7

7. **அந்தரம்** = முடிவு; **நகரவெதுகை** காண்க.

**சோதியிறை வற்கினிய தொல்பிரண வச்சால்**
**போதிய குகேசனடி யுற்றவுறழ் வர்க்குச்**
**சாதிகுல நாமநசை சஞ்சலம் விகற்பம்**
**ஏதுமிலை யென்றறிவி லேறுணர்வு நெஞ்சே.**

*சோதி இறைவற்கு இனிய தொல் பிரணவச் சால்*
*போதிய குகேசன் அடி உற்ற உறழ்வார்க்குச்*
*சாதி குலம் நாமம் நசை சஞ்சலம் விகற்பம்*
*ஏதும் இலை என்று அறிவில் ஏறு உணர்வு நெஞ்சே.*

அறிவுடைய நெஞ்சே! சோதியாயுள்ள கடவுளான சிவபெருமானுக்கு இனிய பழைமையான பிரணவத்தின் மேன்மையை உபதேசம் செய்தருளிய குகேசன் திருவடியைச் சேர்ந்த அறிஞர்க்கு சாதி, குலம், பெயர், ஆசை, துன்பம், வேற்றுமை ஆகிய ஏதுமில்லை என்னும் அறிவில் நிலைப்பெறுவாயாக. 8

**திக்கொடு திகந்தமு நிறைந்தசிவ சேயோன்**
**நக்கனொ டுரைத்தபொரு ணாடுமறி வாளர்**
**துக்கசுக மென்றறை கழிப்பவன முள்ளே**
**சிக்கியுழ லாரறிதி சிந்தனைகொ ணெஞ்சே.**

*திக்குஒடு திகந்தமும் நிறைந்த சிவசேயோன்*
*நக்கன்ஒடு உரைத்த பொருள் நாடும் அறிவாளர்*
*துக்க சுகம் என்று அறை சுழிப்பவனம் உள்ளே*
*சிக்கி உழலார் அறிதி சிந்தனை கொள் நெஞ்சே.*

சிந்தனை செய்யும் நெஞ்சே! திசைகளுடன் திசைகளின் முடிவிலும் நிறைந்திருக்கும் சிவபெருமானின் புதல்வன், சிவபெருமானுக்கு உரைத்த பிரணவத்தின் பொருளை நாடும் அறிவாளர், துக்கம் சுகம் என்று கூறப்படும் சுழிக்காற்றினுள்ளே சிக்கி வருந்தமாட்டார் என்று அறிவாயாக! 9

**அஞ்சொனயம் விஞ்சிய வருட்புகழ்க ளந்நாள்**
**நெஞ்சுருக வோதினவ னெஞ்சுழி யிருந்தோன்**
**தஞ்சமென நிற்குநர் தயங்குவர்கொ லென்றும்**
**சஞ்சலமி லந்தநிலை தன்னையடை நெஞ்சே.**

அஞ்சொல் நயம் விஞ்சிய அருள் புகழ்கள் அந்நாள்
நெஞ்சு உருக ஓதினவன் நெஞ்சுழி இருந்தோன்
தஞ்சம் என நிற்குநர் தயங்குவர்கொல் என்றும்
சஞ்சலம் இல் அந்தநிலை தன்னை அடை நெஞ்சே.

அழகிய சொல் நயம் மிகுந்த திருப்புகழ்களை அந்நாளில் நெஞ்சுருகப் பாடியருளிய அருணகிரிநாதர், தம் மனத்துள்ளே இருந்தோன் தமக்கு அடைக்கலம் என்று இருப்போர் தயக்கம் கொள்வாரோ? எக்காலத்திலும் துன்பமில்லாத அந்த நிலையை நெஞ்சே நீ அடைவாயாக. 10